உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 22.07.2026 • மலர் 04 • இதழ்: 203 • புதன்கிழமை • Edition : Nagercoil • 22.07.2026 • Vol : 04 • Issue : 203 • Page : 4 • Rs. 5/-

# நீட் தேர்வு வினாத்தாள் கசிவு

## என்.டி.ஏ. எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் மோடி கூறியது என்ன?



டெல்லி, ஜூலை 22

எம்.பி.க்கள் கூட்டத்தில், நீட் தேர்வு வினாத்தாள் கசிவு தொடர்பாக பிரதமர் மோடி கூறிய விசயங்களை பற்றி மத்திய மந்திரி ரிஜிஜு பகிர்ந்து கொண்டார்.

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் ஆகஸ்டு மாதம் 13ந்தேதி வரைநடைபெறுகிறது.

இந்த கூட்டத்தொடரில் வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, வருமான வரி (திருத்தம்) மசோதா, சுப்ரீம் கோர்ட்டு (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா, பிறப்பு மற்றும் இறப்புகள் (திருத்தம்) மசோதா, தேசிய கவுரவத்துக்கு அவமதிப்பு தடுப்பு (திருத்தம்) மசோதா (வந்தே மாதரத்துக்கு இடையூறு செய்தால் 3 ஆண்டு சிறை விதிக்கும் மசோதா), சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அபிவிருத்தி (திருத்தம்) மசோதா ஆகிய 6 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

எனினும், நேற்றைய கூட்டத்தொடரின் போது, எதிர்க்கட்சிகள் கடுமையான அமளியில் ஈடுபட்டன. இதனால், இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டன. 2வது நாளாக எதிர்க்கட்சிகள் அமளியால் இரு அவைகளும் இன்றும் முடங்கின. பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

இந்த சூழலில், கூட்டத்தொடருக்கு முன்பு, டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி தலைமையில், மங்கள் மிலன் என்ற பெயரில், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்களின் கூட்டம் இன்று காலை நடந்தது. இதற்காகநாடாளுமன்ற நூலக கட்டிடத்தில் உள்ள ஜி.எம்.சி. பாலயோகி கூட்ட அரங்கில் கூட்டம் நடந்தது.

, பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபீன், மத்திய மந்திரிகள் அமித்ஷா, ஜே.பி. நட்டா, ராஜ்நாத் சிங், நிதின் கட்காரி, அர்ஜுன் ராம் மேக்வால், கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பல முக்கிய மசோதாக்கள் மற்றும் நாடாளுமன்ற அவையில் எதிர்க்கட்சிகளின் அமளியை எதிர்கொள்வது ஆகியவை பற்றி கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

கூட்டம் முடிந்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மத்திய நாடாளுமன்ற விவகார துறை மந்திரி கிரண் ரிஜிஜு, பிரதமர் மோடி கூட்டத்தில் கூறிய விசயங்களை பகிர்ந்து கொண்டார். அவர் கூறும்போது, நீட் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில், அதற்கு பொறுப்பானவர்களுக்கு, கடுமையான சாத்தியப்பட்ட தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பிரதமர் மோடி கூறினார். வினாத்தாள் கசிவுகளை தடுக்க வேண்டியது என்பது தேச அளவிலான, பொறுப்புணர்வு கொண்ட விசயம் என்று கூறினார். தேர்வு நடைமுறையில் முறைகேடு நடைபெறாத வகையிலான கட்டமைப்பை உருவாக்க கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அப்போது வலியுறுத்தினார். இதேபோன்று, அவையில் அலுவல்கள் சீராக நடைபெற கூட்டணி கட்சியினர் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று கூறியதுடன், எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வ முறையில் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டு கொண்டார்.

அரசியல் வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால், நாட்டின் எதிர்காலம் மற்றும் இளைஞர்களின் நலனிற்காக பகிரப்பட்ட பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டிய பொறுப்பு,

அனைத்து எம்.பி.க்களுக்கும் உள்ளது என பிரதமர் கூறினார் என்று மத்திய மந்திரி ரிஜிஜு கூறினார்.

### தருமபுரி மாவட்ட இந்திய ஜனநாயக கட்சி சார்பில்

## மேகதாது அணை திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் மனு



தருமபுரி ஜூலை 22

தருமபுரி மாவட்ட இந்திய ஜனநாயக கட்சி சார்பில் கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டும் திட்டத்தை முழுமையாக கைவிட வலியுறுத்தி, தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழகத்தின் நீர் உரிமையை பாதுகாக்கவும், காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகளை முழுமையாக செயல்படுத்தவும் மத்திய மற்றும் மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்திய ஜனநாயக கட்சியின் தலைவர் டாக்டர் ரவி, பச்சமுத்து மற்றும் நிறுவனத் தலைவர் டாக்டர் பாரிவேந்தர் ஆகியோரின் ஆணைக்கிணங்க, தமிழகம் முழுவதும் நடைபெற்று வரும் தொடர் போராட்டத்தின் ஒரு பகுதியாக, தருமபுரி மாவட்ட இந்திய ஜனநாயக கட்சி சார்பில் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநில அமைப்பு செயலாளர் நஞ்சப்பன் தலைமை தாங்கினார். மண்டல தலைவர் சுப்பிரமணியம், மண்டல செயலாளர் ராஜ்குமார் மற்றும் மண்டல துணைச் செயலாளர் ராஜசேகரலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டும் முயற்சி தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், குடிநீர் தேவையையும் கடுமையாக பாதிக்கும் எனக் கூறி கண்டனம் தெரிவித்தனர். மேலும், காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் வழங்கியுள்ள உத்தரவுகளை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்றும், தமிழகத்திற்கு உரிய நீர் உரிமையை மத்திய மற்றும் மாநில அரசுகள் உறுதியுடன் பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் எந்த நடவடிக்கையும் இந்திய ஜனநாயக கட்சி ஒருபோதும் ஏற்காது என்றும், மேகதாது அணை திட்டத்தை முழுமையாக கைவிட வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். ஆர்பாட்டத்தின் போது "மேகதாது அனைத்திட்டத்தை கைவிடு", "தமிழகத்தின் காவிரி நீர் உரிமையை பாதுகாத்திடு", "விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்று" உள்ளிட்ட கோஷங்கள் முழங்கப்பட்டதால் அந்த பகுதி பரபரப்பாக காணப்பட்டது . இதைத் தொடர்ந்து இந்திய ஜனநாயக கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று மேகதாது அணை திட்டத்திற்கு எதிராகவும், தமிழகத்தின் காவிரி நீர் உரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனுவை அளித்தனர். இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகளை கருணாகரன் தருமபுரி சட்டமன்றம், முனிரத்தினம் பாலகோடு சட்டமன்றம்,பெருமாள்பென்னாகரம்சட்டமன்றம், ராஜீவ் காந்தி பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றம் உள்ளிட்டவர்கள் செய்திருந்தனர்.

## ஸ்ரீராம் அசெட் மேனேஜ்மென்ட் புதுப்பிக்கப்பட்ட மூன்று ஹைப்ரிட் நிதி வாய்ப்புகள் அறிமுகம்

சென்னை, ஜூலை22,

ஸ்ரீராம் அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனம் தனது மூன்று ஹைப்ரிட் நிதிகளுக்காக ஒரு புதுப்பிக்கப்பட்ட நிதி வாய்ப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வாய்ப்புகள் பரஸ்பர நிதி விநியோகஸ்தர்கள் பங்குதாரர்கள் ஆகியோருக்கு சலுகை காலம் ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 7 வரை நடைமுறையில் இருக்கும்.

இது குறித்து கருத்து தெரிவித்த ஸ்ரீராம் ஏஎம்சி நிறுவனத்தின நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான கார்த்திக் ஜெயின், இந்தப் புதுப்பிக்கப்பட்ட கட்டமைப்பு, ஸ்ரீராம் மல்டி அசெட் அலோகேஷன் ஃபண்ட், ஸ்ரீராம் அக்ரசிவ் ஹைப்ரிட் ஃபண்ட் மற்றும் ஸ்ரீராம் பேலன்ஸ்டு அட்வான்டேஜ் ஃபண்ட் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்த நிதிகள், பங்கு, கடன் மற்றும் தங்கம், வெள்ளி மீதான முதலீடுகளை இணைக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட சொத்து ஒதுக்கீட்டு அணுகுமுறையைப் பின்பற்றும். இது சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப நிதி மேலாளர்கள் தங்கள் ஒதுக்கீடுகளை மாறும் தன்மையுடன் சரிசெய்ய அனுமதிக்கிறது. நிறுவனத்தின்படி, இந்தத் திருத்தப்பட்ட முதலீட்டுக் கட்டமைப்பில், சொத்து ஒதுக்கீட்டு செயல்முறை, நியாயமான விலையில் வளர்ச்சி கொள்கைகளின் அடிப்படையிலான பங்குத் தேர்வு முறை, ஆராய்ச்சி அடிப்படையிலான நிலையான வருமான கட்டமைப்பு மற்றும் தங்கம், வெள்ளி மீதான முதலீடு ஆகியவை அடங்கும். ஸ்ரீராம் பேலன்ஸ்டு அட்வான்டேஜ் ஃபண்ட், ஈக்விட்டி மற்றும் கடன் பத்திரங்களுக்கு இடையே மாறும் தன்மையுடைய ஒதுக்கீட்டை விரும்பும் முதலீட்டாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேசமயம், ஸ்ரீராம் அக்ரசிவ் ஹைப்ரிட் ஃபண்ட், நீண்ட கால மூலதன மதிப்பு உயர்வதற்கான சாத்தியக்கூறுடன், அதிக ஈக்விட்டி பங்களிப்பை வழங்குவதே இந்த மறுசீரமைப்பின் நோக்கம் என்று தெரிவித்தார்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், காஞ்சிக்கோவில் தொடக்க வேளாண்மை சரக்கீட்டு கிடங்கில் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி நேற்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

## நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

### அமைச்சர் விஜய் பாலாஜியிடம் செங்குந்தர் சங்கத்தினர் கோரிக்கை



ஈரோடு ஜூலை 22

கைத்தறி துணி நூல் மற்றும் கதர் துறை அமைச்சர் விஜய் பாலாஜியை செங்குந்தர் மகாஜன சங்க மாநில துணைத்தலைவரும், செங்குந்தர் இன் பிஸ்னஸ் நிறுவனருமான நந்தகோபால் சந்தித்து பேசினார். அப்போது தென்காசி சங்கரன்கோவிலில் 15000 நெசவாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர் . அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆவண செய்யுமாறு கேட்டு கொண்டார்.

மேலும் இது தொடர்பான கோரிக்கை மனுவையும் அமைச்சரிடம்அவர்வழங்கினார். அப்போதுஅமைச்சர் விஜய் பாலாஜி சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தார். இந்த சந்திப்பின் போது ஆனந்த் மோகன் எம் எல் ஏ மற்றும் செங்குந்த மகாஜன சங்க மாநில இளைஞர் அணி அமைப்பாளர் செந்தில்குமார் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவில் பேரூராட்சிக்குட்பட்ட குளத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி பார்வையிட்டு,ஆய்வு மேற்கொண்டார்.

## காவிரி நீர் பிரச்சினையில் த வெ க அரசு இன்னும் மவுனம் சாதிப்பது ஏன்?

### வி தி லீடர்ஸ் தன்னார்வலர் கண்டனம்



ஈரோடு ஜூலை 22

வீதி லீடர்ஸ் அமைப்பின் தன்னார்வலர் எஸ் ஆர் சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது தமிழ்நாட்டில் கடுமையான வெப்பநிலை, குறைந்த தென்மேற்கு பருவமழை, வறண்டு வரும் அணைகள், எதிர்கால குடிநீர் நெருக்கடி, சம்பா சாகுபடி குறித்த விவசாயிகளின் அச்சம்—இவை அனைத்தும் இன்று தமிழகத்தின் நிதர்சனமாக மாறியுள்ளன.

இந்தச் சூழலில், தமிழகத்திற்கு சட்டப்படி வழங்கப்பட வேண்டிய 21.09 டி.எம்.சி. காவிரி நீர் இன்னும் நிலுவையில் இருப்பது மிகுந்த கவலையளிக்கிறது. இது வெறும் புள்ளிவிவரம் அல்ல. லட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரமும், கோடிக்கணக்கான மக்களின் குடிநீர் பாதுகாப்பும் இதில் அடங்கியுள்ளன. காவிரி மேலாண்மை ஆணையம் மாதாந்திர ஒதுக்கீட்டின்படி தமிழகத்திற்கு நீரை வழங்குமாறு கர்நாடக அரசுக்கு தெளிவாக அறிவுறுத்தியுள்ளது. அதற்குப் பிறகும் நீர் திறக்கப்படவில்லை என்றால், அந்த ஆணையத்தின் உத்தரவின் மதிப்பு என்ன? உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்க மறுக்கும் போக்கை கூட்டாட்சி அமைப்பு எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? கர்நாடக முதலமைச்சர் எங்கள் அணைகள் நிரம்பிய பிறகே தமிழகத்திற்கு நீர் வழங்கப்படும் என்று கூறியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்திய அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்ட சட்டப்பூர்வ உரிமையை, ஒரு மாநிலம் தன்னிச்சையாக நிறுத்தி வைக்க முடியுமா? உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவையும் விட அரசியல் அறிவிப்புகளுக்கே அதிக மதிப்பா? அதே நேரத்தில், தமிழக அரசிடமும் சில தவிர்க்க முடியாத கேள்விகள் எழுகின்றன. தமிழகத்திற்கு உரிய காவிரி நீரைப் பெற இதுவரை எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகள் என்ன? மத்திய அரசிடம் வலுவான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டதா? காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் முன் தமிழகத்தின் உரிமை முழு வலிமையுடன் வலியுறுத்தப்பட்டதா? விவசாயிகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க அரசு தயாரித்துள்ள அவசர செயல் திட்டம் என்ன? தமிழகத்தின் உரிமை நீர் என்பது அரசியல் கோசமல்ல; அது அரசியலமைப்பால் பாதுகாக்கப்பட்ட உரிமை. அதை உறுதிப்படுத்துவது எந்த அரசாக இருந்தாலும் அதன் அடிப்படை அரசியல் மற்றும் சட்டப்பூர்வ பொறுப்பாகும். வரும் 22 ம் தேதி நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் முக்கியமான வாய்ப்பாகும். அந்தக் கூட்டத்தில் தமிழக அரசு வெறும் கோரிக்கை மனுவுடன் நிற்காமல், நிலுவையில் உள்ள முழு காவிரி நீரையும் பெற்றுத் தருவதற்கான உறுதியான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை வலியுறுத்த வேண்டும். தேவைப்பட்டால், உச்சநீதிமன்றத்தில் உடனடி சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

தமிழக விவசாயிகளின் நலனும், மக்களின் குடிநீர் பாதுகாப்பும் அரசியல் விவாதங்களின் பொருளாக அல்ல; அரசின் செயல்திறனை அளவிடும் மிக முக்கியமான அளவுகோலாகும். இந்த விவகாரத்தில் இனியும் காலதாமதம் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழகத்தின் உரிமையை பாதுகாக்க வேண்டிய நேரம் இது. காரணங்களைச் சொல்லும் நேரம் அல்ல; செயல்படும் நேரம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தருமபுரியில் ஸ்ரீ சக்தி சொர்ண முத்து மாரியம்மன் கோவில் 37 ஆம் ஆண்டு திருவிழா



தருமபுரி ஜூலை 22

தருமபுரி நகரில் எஸ்.வி.ரோடு குப்பையன் தெருவில் உதயமரத்தடியில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி சொர்ண முத்து மாரியம்மன் திருக்கோவிலின் 37 ம் ஆண்டு திருவிழாவை முன்னிட்டு அம்மனுக்கு அபிஷேகங்கள், சிறப்பு பூஜைகள் செய்து வெள்ளி கவசத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதனை தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக 108 வேல் பூஜை மற்றும் விளக்கு பூஜைகள் நடைபெற்றது.

இதில் நகர பகுதியைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டு வாழை இலையில், அரிசி, மஞ்சள்,

பல்வேறு வகையான பூக்களை வைத்து விளக்கேற்றி வழிபாடு செய்தனர். மேலும் இந்த விளக்கு பூஜையில் ஆன்மீக செம்மல், மகாகவி பாரதி, தங்கமகள் விருது பெற்ற த.ஜெகதீஸ்வரி கலந்து கொண்டு, வேல்மாறல் மகா மந்திரம் என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றினார். ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்கள் ஆர்வமுடன் கேட்டு மகிழ்ந்தனர்.

# ஆன்லைன் முதலீட்டு பெயரில் பல கோடி மோசடி? ஈரோடு தம்பதிகள் மீது மேலும் இருவர் எஸ்.பி.யிடம் புகார்



ஈரோடு ஜூலை 22

ஈரோடு எஸ் பி அலுவலகத்திற்கு நேற்று திருவள்ளுவர் மாவட்டம் திருத்தணி தாலுகா பிரக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த குமார் (55) என்பவர் தனது உறவினர்களுடன் வந்து கண்ணீர் மல்க புகார் மனு அளித்தார் அதில் அவர் கூறியிருப்பதாவது:

நான் சென்னையில் பள்ளி ஆசிரியராக பணியாற்றி வருகிறேன் இந்நிலையில் எனது நண்பர் மூலமாக ஈரோடு பெருந்துறை வட்டம் வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த கணவன் மனைவி அறிமுகமாகினர் நாங்கள் ஆன்லைனில் தொழில் செய்து வருவதாகவும் அதில் நீங்கள் பணத்தை முதலீடு செய்தால் தினம் தோறும் மூணரை சதவீதம் லாபமும் மற்றும் 100 நாட்களுக்குள் உங்களது பணத்தை இரு மடங்குகளாக லாபத்தை திருப்பி தருவதாக கூறிய என்னிடம் அவர்களது அலுவலகத்தில் வைத்து கடந்த 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் தேதி சுமார் 21 லட்சம் பணத்தை வங்கியின் மூலம் அந்த தம்பதிகளின் வங்கி கணக்கிற்கு நான் செலுத்திேனன் அதன்பின் ஒரு வாரத்தில் உங்களது லாபமாக ரூ 1 லட்சத்து 50 ஆயிரம் பணத்தை அவர்கள் தந்தனர்

அதன் பிறகு எந்த ஒரு லாபமும் இன்று வரை கொடுக்கவில்லை நான் பலமுறை அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர்கள் இருவருமே தொலைபேசியை எடுக்கவில்லை அதன் பின் சந்தேகம் அடைந்து பெருந்துறை அடுத்த வெள்ளோடு கிராமத்தில் விசாரித்த போது அவர்கள் என்னைப் போன்று பலரிடமும் ஆன்லைனில் தொழில் செய்து தருவதாக பணத்தை பல கோடி ரூபாய் மோசடி செய்திருப்பது குறித்து கேள்விப்பட்டு அதிர்ச்சி அடைந்தேன் அவர்கள் என்னிடம் வேண்டுமென்றே மோசடி செய்து சதி திட்டம் தீட்டி ஏமாற்றி உள்ளனர் எனவே எங்களை ஏமாற்றிய தம்பதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு அவர்கள் அதில் கூறியுள்ளனர்

இதைப்போல் ஈரோடு தாலுகா சென்னிமலை ரோடு பகுதியை சேர்ந்த கார்த்திகேயன் என்பவர் இந்த தம்பதிகள் மீது இன்று எஸ் பி அலுவலகத்தில் புகார் மனு அளித்தார் அதில் அவர் கூறியிருப்பதாவது:

நான் வேளாண்மை துறையில் பணியாற்றி வருகிறேன் என் நண்பர் மூலமாக பெருந்துறை வட்டம் வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த கணவன் மனைவி இருவரும் அறிமுகமாகினர் நாங்கள் ஆன்லைனில் தொழில் செய்து வருகிறோம். நீங்களும் அதில் முதலீடு செய்தால் இரு மடங்கு பணம் தருகிறோம் என்று என்னிடம் ஆசை வார்த்தை கூறினர் இதனை நம்பி கடந்த 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் தேதி 11 லட்சம் பணத்தை அவர்களது வங்கி கணக்கிற்கு செலுத்தினேன் அடுத்த ஒரு வாரத்தில் ஒரு லட்ச ரூபாய் பணம் கொடுத்தனர் அதன் பிறகு தற்போது வரை எந்த ஒரு பணமும் கொடுக்கவில்லை அவர்களுக்கு போன் செய்தாலும் எடுப்பதில்லை அவர்களைக் குறித்து விசாரித்த போது அவர்கள் இதைப் போன்று பல பேரிடம் மோசடியில் ஈடுபட்டு இருப்பது தெரிய வந்தது எனவே அவர்கள் இருவரையும் கைது செய்து பணத்தை மீட்டு தர நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாச அவர் இந்த மனுவில் கூறியுள்ளார்

# முன்னாள் படைவீரர்கள் குறைதீர்க்கும் கூட்டம்: கலெக்டரிடம் கோரிக்கை



நாகர்கோவில், ஜூலை. 22

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில் முன்னாள் படைவீரர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களை சார்ந்தோர்களின் குறைகளை களைவதற்கு காலாண்டிற்கு ஒரு முறை சிறப்பு குறை தீர்க்கும் முகாம் நடைபெற்று வருகிறது. அடிப்படையில் முன்னாள் இராணுவ வீரர்களின் குடும்பத்தினரிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. இம்முகாமில் கருணை அடிப்படை வேலைவாய்ப்பு, நிலப்பிரச்சினை, பட்டா கோருதல உள்ளிட்டவைகள் என மொத்தம் 23 மனுக்களை முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களை சார்ந்தோர்கள் வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் உடனுக்குடன் தீர்வு காண வேண்டுமென துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர் நலத்துறை அலுவலர்கள், முன்னாள் படைவீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# சாகுபடி முறைகளை மேற்கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்: கலெக்டர் தகவல்

சேலம், ஜூலை 22

எல்நினோ என்பது பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடல் மேற்பரப்பில் வெப்பநிலை இயல்பை விட அதிகரிப்பதால் உருவாகும் இயற்கையாக நிகழும் காலநிலை மாற்றம் ஆகும். இது உலகளாவிய காற்றின் தன்மை மற்றும் மழைப்பொழிவு அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும். பல நாடுகளின் வானிலை மாற்றம் காரணமாக வேளாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. இந்தியாவில் குறிப்பாக தென்மேற்கு பருவமழையின் தீவிரம் மற்றும் மழைப்பொழிவு பருவ நிலை மாற்றங்களை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. தமிழ்நாட்டில் எல்நினோ தாக்கத்தின் காரணமாக அதிக வெப்பநிலை மழைப்பொழிவில் காலதாமதம் அல்லது இடைவெளி, சில பகுதிகளில் மழை குறைவு மற்றும் நீர்வள அழுத்தம் போன்ற சூழ்நிலைகள் உருவாக கூடும். இருப்பினும் வடகிழக்கு பருவமழையின் செயல்பாடு உள்ளிட்ட பிற காலநிலை காரணிகளும் மழைப்பொழிவு பாதிப்பதால் ஒவ்வொரு ஆண்டும் தாக்கம் ஒரே மாதிரியாக இருக்காது. சேலம் மாவட்டத்தில் பெரும்பாலான பயிர்கள் பருவ மழை மற்றும் நீர் பாசனத்தை சார்ந்துள்ளது. மழை குறைவு அல்லது நீண்ட வறண்ட இடைவெளி ஏற்படும். அதனால் நெல், மக்காச்சோளம், சிறுதானியங்கள், பருப்பு வகைகள், மஞ்சள், மரவள்ளி கிழங்கு மற்றும் தோட்டக்கலை பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூல் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. அதிக வெப்பநிலை காரணமாக மண்ணின் ஈரப்பதம் குறைதல் பாசன தேவைகள் அதிகரித்தல் மற்றும் பூச்சி நோய் தாக்கங்கள் அதிகரிக்கும் சாத்தியம் உண்டு. எனவே சேலம் மாவட்ட விவசாயிகள் இந்திய வானிலை ஆய்வு மையம் மற்றும் வேளாண்மை துறையின் வானிலை முன்னறிவிப்புகளை கவனித்து அதற்கு ஏற்ப சாகுபடி செய்ய திட்டமிடல் வேண்டும். போதுமான மழை பெய்த பின்னரே விதைப்பு மேற்கொள்ள வேண்டும். வறட்சியை தாங்க கூடிய மற்றும் குறுகிய காலத்தில் மகசூல் தரக்கூடிய பயிர் ரகங்களை தேர்வு

செய்ய வேண்டும். சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன முறைகளை பயன்படுத்தி நீரை சிக்கனமாக பயன்படுத்தி மழை நீர் சேகரிப்பு, பண்ணை குட்டைகள் அமைத்தல் வரப்புகள் அமைத்தல் மற்றும் மூடாக்கு போன்ற முறைகளால் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க வேண்டும். மண் பரிசோதனை அடிப்படையில் சமச்சீர் உரம் இடல் மேற்கொள்ளப்பட வேண்டும். வயல்களில் பூச்சி மற்றும் நோய் தாக்கங்களை தொடர்ந்து கண்காணித்து வேளாண் துறையினரின் பரிந்துரைப்படி பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தோட்டக்கலை பயிர்களுக்கு போதுமான ஈரப்பதம் மற்றும் நிழல் பாதுகாப்பும் ஏற்படுத்த வேண்டும். கால்நடைகளுக்கு போதுமான குடிநீர் வசதி, தீவனம் மற்றும் நிழல் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். சேலம் மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டங்களில் பதிவு செய்து அரசின் வேளாண் நலத்திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறும் சந்தேகங்கள் இருப்பின் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையம், தோட்டக்கலைத் துறை அல்லது வேளாண் பொறியியல் துறை அலுவலர்களின் ஆலோசனைகளை பெற வேண்டும். சேலம் மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண் துறையினர் காலநிலை நிலவரத்தை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். விவசாயிகள் அதிகாரப்பூர்வ வானிலை முன்னறிவிப்புகளை மட்டுமே பின்பற்றி அறிவியல் அடிப்படையிலான சாகுபடி

முறைகளை மேற்கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# 33% மகளிர் இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்தக் கோரி மதுரையில் ஆர்ப்பாட்டம்




மதுரை, ஜூலை 22

மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் சார்பில் மதுரையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) விடுதலை அமைப்பின் மாநிலச் செயலாளர் தோழர் மெய்யர் சிறப்புரையாற்றினார். பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை நிறைவேற்றிய மத்திய அரசு, அதை நடைமுறைக்கு கொண்டு வராமல் காலதாமதம் செய்வதாக அவர் குற்றம்சாட்டினார்.

இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் மாவட்டக் குழுத் தலைவர் மல்லிகா ராணி முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் தோழர் கோயக் மெய்யப்பன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு, பெண்களின் அரசியல் உரிமையை உறுதி செய்ய இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று, “33% மகளிர் இடஒதுக்கீட்டை உடனே அமல்படுத்து”, “பெண்களின் அரசியல் உரிமையை பறிக்காதே”, “சமத்துவ ஜனநாயகத்தை நிலைநாட்டு” உள்ளிட்ட முழக்கங்களை எழுப்பினர்.


# கல் குவாரிக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பு: மாவட்ட ஆட்சியரிடம் மனு



மதுரை, ஜூலை 22

மதுரை மாவட்டம் கச்சியாரன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண் 697/2 பகுதியில் புதிதாக கல் குவாரி அமைக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாகக் கூறி, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர். மனுவில், விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புகள் சூழ்ந்த பகுதியில் கல் குவாரி செயல்பட்டால் சுற்றுச்சூழல் பாதிப்பு, நிலத்தடி நீர் மாசுபாடு, தூசி மற்றும் வெடிவைப்பால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதியில் ஏற்கனவே 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், பள்ளி, விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புகள் அருகே குவாரி அமைப்பது பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கல் குவாரிக்கு அனுமதி (Permit) வழங்கக்கூடாது என்றும், மக்களின் வாழ்வாதாரத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# திருப்பூரில் போலி இறப்பு சான்றிதழ் பெற்ற மகன் மீது நடவடிக்கை எடுக்க பெண் ஆட்சியரிடம் மனு



திருப்பூர், ஜூலை 22

செட்டிபாளையத்தை சேர்ந்த சாந்தாமணி கொடுத்த மனு: எனது மாமனார் நாராயணசாமிக்கு பாத்தியப்பட்ட கோவை வடக்கு வட்டம், சின்னவேடம்பட்டி கிராமம் 7.35 செண்ட் உள்ளது. நாராயணசாமி கடந்த 04.02.1974ம் தேதி அவர் காலமாகிவிட்டார். K.நாராயணசாமி நாயுடு வாரிசுப்படி வாரிசுதாராகள் N.ரங்கநாதன் (1), N.ரேணுகாதேவி (எ) ரேணுகா (2). N.கோவிந்தராஜுவ (3. N.தாமோதரன் (4) ஆரிய நால்லி ஆவோம். மேற்படி எனது கணவன் N.கோவிந்தராஜலு 31.07.1998 அன்று காலமாகிவிட்டார். அதன் பின் என்னுடைய அனுபவத்தில் இருந்து வந்த எனது மகன் ராஜ்குமார் என்பவர் எனக்கு தெரியாமல் நான் உயிருடன் இருக்கும் பொழுதே நான் 25.01.1999ம் தேதி அன்று இறந்துவிட்டதாக பொய்யான தகவல் சொல்லி எனது இறப்பு சான்றினை திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், 15 வேளையும் டவுன் பஞ்சாயத்தில் இறப்பு சான்று எண்.S.L.No.0324 என கொண்ட போலியான இறப்பு சான்றிதளை திருப்பூரில் பெற்று உள்ளார். மேற்படி சொத்தை எனது மகன் ராஜ்குமார் எனக்கு தெரியாமல் எனது கணவரின் குடும்பத்தாரிடம் பொய்யான தகவல் கூறி மேற்படி சொத்தை 11.10.2004ம் தேதி அன்று எனது கணவரின் குடும்பத்தாரும். எனது மகனும் பாக சாசனம் பிரித்துள்ளனர். மேலும் எனது கணவரின் பங்கு இடத்தை எனது மகன் பொய்யான என்னுடைய இறப்பு சான்றிதழ்கள் காட்டி கணவரின் பங்கு இடத்தை விற்று வருகிறான். மனைது சொத்துக்களில் ஓர் பகுதி எனது மகள் ராஜ்குமார் மனைவி சத்யா என்ற பெயருக்கு மாற்றி உள்ளான். நான் உயிருடன் இருக்கும் பொழுது எனது பெயரில் பொய்யான இறப்பு சான்றிதழ் பெற்ற எனது மகன் ராஜ்குமார் மீது தக்க நடவடிக்கை எடுத்து எனது பெயரில் உள்ள இறப்பு சான்றை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தருமபுரி ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தருமபுரி ஜூலை 22

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, பஸ் வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டியும், பட்டா வேண்டுதல், சிட்டா பெயர் மாற்றம், புதிய குடும்ப அட்டை வேண்டுதல், வாரிசு சான்றிதழ், வேலை வாய்ப்பு, இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் ஓய்வூதியத் தொகை உள்ளிட்ட இதர உதவித்தொகைகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்தும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி தொகைகள், உபகரணங்கள் வேண்டியும் மொத்தம் 602 கோரிக்கை மனுக்களை பொதுமக்களிடமிருந்து ஆட்சியர் பெற்றுக் கொண்டார். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார். இந்த கூட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் ஒரு நபருக்கு புதிய மின்னணு குடும்ப அட்டை மற்றும் சமூக பாதுகாப்பு திட்டம் மூலம் ஒரு நபருக்கு ஓய்வூதியத் தொகைக் கான ஆணை உள்ளிட்ட நலதிட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார். இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மதுமதி, தருமபுரி உதவி ஆட்சியர் ஜார்ஜ், மாவட்ட வழங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கோவிந்தன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் ஷெர்லி ஏஞ்சலா உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை அப்போலோ மருத்துவமனையில் அதிநவீன ஆண்ட்ரோலஜி சிறப்பு கிளினிக் தொடக்கம்!




மதுரை, ஜூலை 22

மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனையில் ஆண்களுக்கான பாலியல் ஆரோக்கியக் குறைபாடுகள், ஆண்மைக்குறைவு மற்றும் குழந்தையின்மைப் பிரச்சனைகளுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில் அதிநவீன ஆண்ட்ரோலஜி கிளினிக் (Andrology Clinic) தொடங்கப்பட்டுள்ளது.

இக்கிளினிக்கில் ஆண்களின் மலட்டுத் தன்மை, விந்தணு குறைபாடு, விரைப்புத்தன்மை கோளாறு, வரிகோசீல் மற்றும் ஹார்மோன் குறைபாடுகளுக்கு அதிநவீன லேசர், ரோபோடிக் மற்றும் நுண் அறுவை சிகிச்சை (Microsurgical) நுட்பங்கள் மூலம் முழுமையான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

முக்கிய சிறப்பம்சங்கள்:

மேம்பட்ட சிகிச்சைகள்: TESA, PESA, TESE போன்ற சிறப்பு விந்தணு மீட்பு முறைகள் மற்றும் ஆண் குறி செயற்கை உறுப்பு பொருத்துதல் (Penile Prosthesis Implantation) உள்ளிட்ட நவீன வசதிகள்.

ஆலோசனை மற்றும் ரகசியத்தன்மை: திருமணத்திற்கு முந்தைய பரிசோதனைகள், மனநல ஆலோசனைகளுடன் நோயாளிகளின் விவரங்கள் முழு ரகசியமாகப் பராமரிக்கப்படும்.

ஆன்லைன் வசதி: நேரில் வரத் தயங்குபவர்கள் மற்றும் வெளியூர் வாசிகளுக்காக ஆன்லைன் ஆலோசனை (Online Consultation) வசதியும் உண்டு. மருத்துவமனையின் சிறுநீரகவியல் மற்றும் ஆண்மையியல் நிபுணர்களான டாக்டர் ஜே. அருண்குமார், டாக்டர் கே. சங்கர், டாக்டர் ஆர். விஷ்ணுராஜா, தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் நிகில்

திவாரி மற்றும் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் பி. சோபனா ஆகியோர், "தயக்கம் காரணமாக ஆண்களின் உடல்நலப் பிரச்சனைகளைப் புறக்கணிக்கக் கூடாது. ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் அதிநவீன சிகிச்சை முறைகள் மூலம் இவற்றை முழுமையாகக் குணப்படுத்த முடியும்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சேலம், ஜூலை 22

சேலம் மாவட்டத்தில் ஜூலை 2026 மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 24.07. 2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சேலம் மாவட்ட

ஆட்சியர் அலுவலக இரண்டாம் தள கூட்ட அறை எண். 215 ல் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு வேளாண்மை சம்பந்தமான தங்கள் குறைகளை நேரிலும், விண்ணப்பத்தின் மூலமாகவும் தெரிவிக்கலாம். இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# ஈரோட்டில் தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிவது குறித்து ராட்சத பொம்மை மூலம் நூதன முறையில் விழிப்புணர்வு

## தெற்கு போக்குவரத்து காவல் நிலைய போலீசார்!



ஈரோடு ஜூலை 22

ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டி.வி.கிரண் ஸ்ருதி ஐபிஎஸ்., அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு டவுன் டிஎஸ்பி முத்துக்குமார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஈரோடு தெற்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் முருகேசன் தலைமையில் ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா சிக்னலில் போக்குவரத்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

இதில் இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு ஹெல்மெட் அணிவதன் முக்கியத்துவம் குறித்தும், நான்கு சக்கர வாகன ஓட்டிகளுக்கு சீட் பெல்ட் அணிவதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக, வாகன ஓட்டிகளைக் கவரும் வகையில் ராட்சத பொம்மை வடிவிலான உருவத்தைக் கொண்டு நூதன முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது பொதுமக்களின் பெரும் கவனத்தை ஈர்த்தது.

இந்நிகழ்வில் தெற்கு போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளர் ரஞ்சித் ராஜா, தலைமை காவலர் அர்ஜுனன், முதல் நிலை காவலர்களான சக்திவேல், சத்யானந்தம் உள்ளிட்ட காவலர்கள் பலர் கலந்து கொண்டு விழிப்புணர்வுப் பணியில் ஈடுபட்டனர்.

## தக்கலை அருகே

# ஆசிரியை குளிப்பதை ரகசியமாக வீடியோ எடுத்து பலாத்காரம்: 2 வாலிபர்கள் மீது வழக்கு

நாகர்கோவில், ஜூலை. 22

தக்கலை அருகே உள்ள ஒரு பகுதியை சேர்ந்த 36 வயதான ஆசிரியை மதுரை உயர் நீதிமன்ற கிளையில் ஒரு மனு செய்திருந்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

நான் பள்ளி ஒன்றில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறேன். எனது கணவர் டெம்போ டிரைவராக உள்ளார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நான் எனது வீட்டில் குளித்துக் கொண்டிருந்த போது, அதே பகுதியை சேர்ந்த ஜெயகாந்த் என்பவர் ரகசியமாக செல்போனில் வீடியோ எடுத்தார். இதை கண்டு நான் சத்தம் போட்ட உடன் அவர் தப்பி ஓடினார். பின்னர் அவர் செல்போனில் என்னை தொடர்பு கொண்டு, சம்பவத்தை வெளியே கூறினால் கொன்று விடுவதாக மிரட்டினார். இதனால் நான் யாரிடமும் கூறவில்லை. இதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு நான் தனியாக வீட்டில் இருக்கும் போது ஒருநாள் எனது வீட்டுக்கு வந்த ஜெயகாந்தன் செல்போன் பதிவை காட்டி, நான் சொல்வது போல் கேட்க வேண்டும் என மிரட்டி, என்னுடன் கட்டாயமாக உடலுறவு கொண்டார். ஒரு கட்டத்தில் உடலுறவு வைத்ததையும் ரகசியமாக வீடியோ எடுத்துள்ளார். அது மட்டுமின்றி என்னிடமிருந்து ரூ. 45 ஆயிரம் வரை பணம் வாங்கினார்.

பின்னர் ஜெயகாந்தன் வெளிநாடு சென்று விட்டார். அந்த சமயத்தில் அவரது நண்பர் ஜெகன் என்பவர் வந்து மேற்கண்ட சம்பவத்தை கூறி பலமுறை என்னை மிரட்டி பலாத்காரம் செய்தார். நான் எனது கணவரிடம் தெரிவித்த போது, அவர்கள் எனது கணவரை மிரட்டி உள்ளனர். எனவே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கூறியிருந்தார். இதையடுத்து புகாரின் பேரில் தக்கலை போலீசார் விசாரணை நடத்தி தொழில்நுட்பத்தைதவறாக பயன்படுத்ல், மறைத்து வீடியோ எடுத்தால் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் ஜெயகாந்தன், ஜெகன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தனர். போலீசார் கூறுகையில், நீதிமன்ற உத்தரவு அடிப்படையில் வழக்கு பதிவு செய்துள்ளோம். விசாரணைக்கு பின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.




## மதுரை மாவட்ட சிறு மற்றும் குறுந்தொழில்கள் சங்கமான மடீட்சியா சார்பில்

# தென் தமிழகத்தின் மிகப்பெரிய பிரிண்ட் மற்றும் பேக்கேஜிங் தொழில்துறை கண்காட்சி

மதுரை, ஜூலை 22

மதுரை மாவட்ட சிறு மற்றும் குறுந்தொழில்கள் சங்கமான மடீட்சியா சார்பில், தென் தமிழகத்தின் மிகப்பெரிய பிரிண்ட் மற்றும் பேக்கேஜிங் தொழில் துறை கண்காட்சியான 11 வது PRINT N PACK 2026 வரும் 24,25 மற்றும் 26 ஜூலை 2026 ஆகிய மூன்று நாட்கள் மதுரை ஐடா ஸ்கட்டர் வர்த்தக மையத்தில், வேலம்மாள்ம ருத்துவக் கல்லூரி வளாகம், ரிங் ரோடு, மதுரையில் பிரம்மாண்டமாக நடைபெறுகிறது. அச்சுத் துறை மற்றும் பேக்கேஜிங் துறையில் உலகளவில் வேகமாக வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்கள், நவீன இயந்திரங்கள், புதுமையான தயாரிப்புகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வுகளை ஒரே இடத்தில் அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் இக் கண்காட்சி நடத்தப்படுகிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து 180க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள்இ க்கண்காட்சியில் பங்கேற்று, அச்சு, பேக்கேஜிங் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்துறைகளுக்கான அதிநவீன இயந்திரங்கள், உபகரணங்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துகின்றன. PRINT N PACK 2026ல் கீழ்க்கண்ட துறைகளில் சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்கள்இடம்பெறுகின்றன.

மல்டிகலர் ஆப்செட் பிரின்ட் இயந்திரங்கள், டிஜிட்டல் பிரின்டிங் தொழில்நுட்பங்கள், பிளெக்ஸோகிராபிக் *(Flexographic* பிரின்ட், கிராவ்யூர் *(Gravure)* பிரின்ட், ஸ்கிரீன் பிரின்டிங், லேபிள் மற்றும் ஸ்டிக்கர்அ ச்சிடும் இயந்திரங்கள், கார்கேட்டட் பாக்ஸ் தயாரிப்பு இயந்திரங்கள், பேக்கேஜிங் இயந்திரங்கள், பேப்பர்க ன்வெர்ஷன் தொழில்நுட்பங்கள், ஆட்டோமேஷன் அமைப்புகள் தொழில் துறை மென்பொருள் தீர்வுகள், பிரின்டிங் மைகள் *(Printing Inks)*, பிரின்டிங் நுகர்பொருட்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த *(Ecofriendly)* பேக்கேஜிங் தயாரிப்புகள், தரமான பேக்கேஜிங்தீர்வுகள், இந்தியாவின் முன்னணி உற்பத்தியாளர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தங்களது புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உலகத்தர தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த உள்ளனர். தொழில்முனைவோருக்கு சிறந்த வணிக வாய்ப்பு PRINT N PACK 2026 கண்காட்சி புதிய தொழில் முதலீடுகள், புதிய இயந்திரங்கள் வாங்குதல், புதிய வணிக கூட்டாண்மைகள், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் சிறந்த தளமாக அமையும்.

அச்சக உரிமையாளர்கள், பேக்கேஜிங் உற்பத்தியாளர்கள், புத்தக வெளியீட்டாளர்கள், உணவுப் பொருள்உ ற்பத்தியாளர்கள், மருந்து நிறுவனங்கள், லேபிள் தயாரிப்பாளர்கள், காகித தொழில்கள், கார்ட்டன் பெட்டிதயாரிப்பாளர்கள், விளம்பர நிறுவனங்கள், தொழில்முனைவோர், MSME நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இக்கண்காட்சி பயனுள்ளதாக இருக்கும்.



# ஜெர்மன் மொழிப் பயிற்சி முடித்த 6 மாணவர்களுக்கு கலெக்டர் சான்றிதழ் வழங்கினார்

நாகர்கோவில், ஜூலை. 22

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் என்னும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் வேலைவாய்ப்பற்ற மற்றும் வேலையில்லாத இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் திறன்களை மேம்படுத்த பல்வேறு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் ஹாலோ மொழி மையத்தின் திறன் பயிற்சி அளிப்போரால் செவிலியர் மாணவர்களுக்கு ஜெர்மன் மொழிப் பயிற்சி கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் 45 மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

இப்பயிற்சியில் மாணவர்களுக்கு ஜெர்மன் மொழி சரளமாக பேச, கேட்க, எழுத மற்றும் மருத்துவ சம்பந்தமான சொற்கள் குறியீடுகள், தகவல் சேகரிக்க உள்ளிட்ட மருத்துவ பணிகளுக்கு தேவையான அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டது. மொழி பயிற்சியானது ஏ1, ஏ2, பி1, பி2 என நான்கு நிலைகளிலும் பயிற்சியினை முடித்த 6 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப் சான்றிதழ் வழங்கி கூறுகையில்: சான்றிதழ் பெற்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் தற்போது இப்பயிற்சியின் மூலம் ஜெர்மன் செல்லும் வாய்ப்பினை பெற்றுள்ளார்கள் என்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுடைய பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். எனகூறினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் திறன் மேம்பாட்டு பயிற்சி லட்சுமிகாந்தன், மாவட்ட திறன் அலுவலர் கி.ராஜிகா, பயிற்றுநர்கள், துறை அலுவலர்கள், செவிலிய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# பல் சமய நட்புறவு கழகம் சார்பாக அவதூறாக பேசிய திமுக எம்.எல் .ஏ வை வன்மையாக கண்டிக்கிறோம்



திருப்பூர்:ஜூலை22

தமிழக முதல்வர் சி. ஜோசப் விஜய்அவர்களைமிரட்டும்தோணியிலே பேசிய விளாத்தி குளம் திமுக சட்டமன்ற உறுப்பினரை பல் சமய நட்புறவு கழகத்தின் சார்பாக மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம்..

நாகரீகம் கற்றுத்தந்த தமிழகத்தில் அநாகரிகமான பேச்சுக்களுக்கு நுனி அளவும் கூட தமிழக அரசு இடம் கொடுக்கக் கூடாது. என்றும் தனி மனித தாக்குதல், தனிமனிதரை கண்ணியக் கூறைவாக பேசுதல், ஏசுதல், இழிவாகப் பேசுதல், இவை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும்..

இது பேச்சு சுதந்திரம் என்று கூறுவார்கள் உண்மையான பேச்சு சுதந்திரம் கண்ணியத்தை காக்க கூடிய விதமாக இருக்கும் யார் மனதையும் புண்படக்கூடியதாக இருக்காது உண்மையைப் பேசுவார்கள் நடுநிலையோடு பேசுவார்கள் அது தான் பேச்சு சுதந்திரம் கடந்த ஆட்சியிலே இப்படிப்பட்ட வர்ம பேச்சுகளுக்கு எல்லாம் இடம் கொடுத்த காரணத்தினால் தற்போது இந்த ஆட்சியிலும் தொடர்ந்து பேசி வருவதை நாம் பார்க்கிறோம் அதுவும் பொது மேடைகளில் இப்படிப்பட்ட பேச்சு யாராக இருந்தாலும் மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவர்கள் கடுமையான சட்டத்தின் மூலம் இவர்களை தண்டிக்கப்பட வேண்டும் என்று பல் சமய நட்புறவுக் கழகத்தின் அ. அக்கீம். மாவட்ட பொறுப்பாளர். கண்டன அறிக்கை தெரிவித்துள்ளார்..

# நாகர்கோவிலில் மாணவ மாணவிகளுக்கான உயர்கல்வி வழிகாட்டி முகாம்: கலெக்டர் பங்கேற்பு

நாகர்கோவில், ஜூலை. 22

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, உயர்கல்வியில் சேர விரும்பும் மாணவர்களுக்கு,

தேவையான வழிகாட்டுதல் வழங்கிட மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் உயர்கல்வி வழிகாட்டு முகாம் வழிகாட்டுதல் முகாம் நாகர்கோவிலில் உள்ள தனியார் கல்லூரி கலையரங்கில் நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் மாணவ மாணவியர்களிடையே கூறியதாவது:

இம்முகாமனது மாணவர்களைக் கட்டாயப்படுத்தி வந்து உட்காரவைக்க நடத்தப்படவில்லை. மாணவர்களாகிய நீங்கள் வாழ்வின்மிகமுக்கியமான ஒரு கட்டத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்.

என்ன படிக்க வேண்டும் என்பதில் பலருக்குத் தெளிவு இருக்கலாம்.

சிலருக்குக் சந்தேகம் இருக்கலாம். அந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கான ஒரு எளிய வழிகாட்டி நிகழ்ச்சி தான் இந்த நிகழ்ச்சி. மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த படிப்பை தாங்களே சுயமாக தேர்ந்தெடுக்க வேண்டும்

பெண்கள் என்றால் செவிலியர் பாடப்பிரிவு மட்டும் தான் படிக்க வேண்டும், இந்த ஒரு குறிப்பிட்ட துறைக்கு மட்டும்தான் வேலை கிடைக்கும் என்ற தவறான எண்ணங்களை மாற்றி, எந்தத் துறையாக இருந்தாலும் அப்பாடப்பிரிவினை எதிர்கொண்டு, அத்துறையில் வேலை வாய்ப்பைப் பெற முடியும் என்ற நம்பிக்கை உங்கள் ஒவ்வொருவர்களிடம் ஆழ்மனதில் பதிய வைக்க வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் நன்கு விழிப்புணர்வு பெற்றவர்களாகவும், தங்களுக்குப் பொருத்தமான சிறந்த கல்லூரியையும் படிப்பையும் தேர்ந்தெடுப்பவர்களாகவும் இருக்க வேண்டும். என பேசினார்.

நடைபெற்றநிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் பயிற்சி ர.மோனிகா, மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், உதவி இயக்குநர் திறன் மேம்பாட்டு லட்சுமிகாந்தன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.






# சேலம் மாவட்டத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை மற்றும் பொதுப்பணித்துறைகளின் சார்பில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார்

சேலம், ஜூலை 22

சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி, சங்ககிரி, நங்கவள்ளி, மேச்சேரி, தாரமங்கலம், ஓமலூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற விழாவில் போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் முன்னிலையில் ஊரக வளர்ச்சி, ஊராட்சி துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூபாய் 11.14 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 17 புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார். அதன் பிறகு அவர் பேசியதாவது தமிழக முதலமைச்சர் தமிழ்நாடு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் இன்றைய தினம் ஊரக வளர்ச்சி, ஊராட்சி துறை மற்றும் பேரூராட்சிகள் துறை ஆகிய துறைகளின் சார்பில் பல்வேறு முடிவுற்ற பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அந்த வகையில் ரூ 41.35 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நெய்க்காரப்பட்டி புதிய துணை சுகாதார நிலையம். ரூ 5.36 கோடி மதிப்பில் கட்டப்பட்ட சங்ககிரி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம். ஆவடத்தூர் ஊராட்சி கட்டின நாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ 69.20 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் ரூ.17.30 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கணினி வகுப்பறை கட்டிடம். தாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் ரூ 69.20 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் ரூ 7.56 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள


வகுப்பறையுடன் கூடிய சமையல் அறை கட்டிடம் காப்பரத்தாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ 69.20 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறை கட்டிடங்கள். ஜலகண்டாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ 8.44 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சமையலறை கட்டிடம். ஜலகண்டாபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ 8.44 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சமையலறை கட்டிடம் கூனாண்டியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ. 34.75 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடங்கள். மல்லிகுந்தம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ 34.75 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடங்கள். மானத்தாள் ஊராட்சி ஓலை பட்டியல் ரூ. 45 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளதுணை சுகாதார நிலையம். தேக்கம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ 34.75 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடங்கள். ரூ16.45 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள தேக்கம்பட்டி அங்கன்வாடி மையம். மூங்கில் பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ 34.75 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடங்கள் என மொத்தம் ரூ 10.27 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார். பொதுப்பணி துறை சார்பில் மேட்டூர் வட்டம் நங்கவள்ளி பேரூராட்சி பெரிய வனவாசி அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ 34.75 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை ஆய்வுக்கூடங்கள். நங்கவள்ளி அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ 51.90 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டது .

இன்றைய தினம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில் ரூ.10. 27 கோடி மற்றும் பொதுப்பணி துறையின் சார்பில் ரூ 86.50 லட்சம் என மொத்தம் ரூ 11.14 கோடி மதிப்பிலான திட்ட பணிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கி வரும் இத்தகைய வளர்ச்சி திட்ட பணிகளை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் கேட்டுக் கொண்டார்.



25 வது நினைவு நாள் திரு உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியினை சன் ராமலிங்கம் தலைமையில், முன்னிலை பாசமலர் பாண்டியன், காங்கிரஸ் சார்பில் மாநகர் மாவட்ட பொது செயலாளர் கோவிந்தசாமி, த.வெ.க. மாவட்ட நிர்வாகிகள் பாண்டியன், வினிதாமணிகண்டன், துர்க, சங்கர், செல்வம், அஜித் குமார், மற்றும் திரளக காங்கிரஸ் சிவாஜி மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பொதுமக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது..

# மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆட்சியரிடம் மனு



மதுரை, ஜூலை 22

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி வரும் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி, ஒப்பந்த தொழிலாளர்கள் சார்பில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு அளிக்கப்பட்டது. மனுவில், நீண்டகாலமாக மின்சார வாரியத்தில் பணியாற்றி வரும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு நிரந்தர பணி வழங்க வேண்டும் என்றும், பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள கோரிக்கைகளுக்கு அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், 2020ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைப் போல, நீண்டகாலமாக பணியாற்றி வரும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் உரிய முன்னுரிமை வழங்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது. அத்துடன், பணி பாதுகாப்பு, சம ஊதியம், சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட தொழிலாளர் நலக் கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும், என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகம் திடீர் முற்றுகை: வீட்டு மனை பட்டா வழங்கக்கோரி நடைபெற்றது

நாகர்கோவில், ஜூலை. 22

ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளம் ஊராட்சியில் சுமார் 64 குடும்பங்கள் பல ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். இங்குள்ள பொதுமக்கள் ஆதார் அட்டை, ரேஷன் அட்டை, மின்கட்டணரசீது, வீட்டு வரி உள்ளிட்ட அனைத்து அரசு ஆவணங்களையும் வைத்துள்ளனர். இருந்த போதிலும் இதுவரை அவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கவில்லை.

இது குறித்து பலமுறை மனுக்கள் அளிக்கப்பட்டதன் பேரில் வட்டாட்சியர் அலுவலக அதிகாரிகளால் ஆய்வு செய்து, 64 குடும்பங்களுக்கு பட்டாக்கள் தயார் செய்யப்பட்டன. பட்டாக்கள் தயாராகி கடந்த 4 மாதங்கள் ஆகியும் பயனாளிகளுக்கு வழங்காமல் வட்டாட்சியர் அலுவலகத்தில் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து அதிகாரிகளின் தாமதப் போக்கை கண்டித்தும், தயாராக உள்ள வீட்டுமனை பட்டாக்களை உடனே வழங்க கோரியும் நேற்று அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்திற்கு கட்சியின் குமாரி மாவட்ட செயலாளர் கண்ணன் தலைமை வகித்தார்.ராஜமங்கலம் ஒன்றிய செயலாளர் ராஜ்குமார் உட்பட பலர் பங்கேற்றனர். போராட்டத்தில் பங்கேற்ற பொதுமக்கள் வருவாய் துறை நிர்வாகத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். 64 குடும்பங்களுக்கும் உடனடியாக பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் போராட்டங்கள்தீவிரப் படுத்தப்படும் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

# காக்களூர் சிவன் கோவில் குளக்கரை பகுதியில் ஆக்கிரமிப்பு கடை அகற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக ஒன்றிய செயலாளர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு



திருவள்ளூர், ஜூலை 22

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அடுத்த காக்களூர் சிவன் கோவில்குளக்கரைபகுதியில்ஆக்கிரமிப்பு கடையை அகற்றக்கோரி நோட்டீஸ் கொடுத்தும்அகற்றாததால்பலத்தபோலீஸ் பாதுகாப்புடன் வருவாய்த் துறையினர் இடித்துஅகற்றுவதற்குஎதிர்ப்புதெரிவித்து திமுகஒன்றியசெயலாளர்வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது

திருவள்ளூர் அடுத்த காக்களூர் ஊராட்சியில்10ஆயிரத்திற்கும்மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். திருவள்ளூர் ஆவடி சாலை மற்றும் காக்களூர்கிராமத்திற்குள்செல்லும்சாலை பகுதியில் சிவன் கோவில் பின்புறம் குளம் ஒன்று உள்ளது. இந்த குளக்கரையில் பொது மக்களின் வசதிக்காக ரூ. 97 லட்சம் மதிப்பீட்டில் நடைபாதை அமைக்கும் பணி தொடங்கப்பட்ட நிலையில் ஆக்கிரமிப்பு காரணமாக பாதியில் நிறுத்தப்பட்டது. மேலும் நடை பாதை பகுதியில் மின்விளக்குகள் இல்லாததால் அசம்பாவிதங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்பட்ட நிலையில் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ச.கவிதா உத்தரவின் பேரில் கடந்த ஜூன் மாதம் ஆக்கிரமிப்பு கடை அகற்றப்பட்டது. அதே நேரத்தில் குளக்கரை அருகே உள்ள மீன் கடையை அகற்ற நோட்டிஸ் கொடுத்தும் அகற்றாததால் மாவட்ட ஆட்சியர்உத்தரவின்பேரில்வட்டாட்சியர் சரண்யா வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இளங்கோவன் ,

ஜானகி முன்னிலையில் ஜேசிபி எந்திரங்கள் மூலம் ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் இடித்து அகற்ற முற்பட்ட போது இதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன் அதிகாரிகளிடம் நீண்ட நேரம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. திமுக ஆட்சியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்த நிலையில் ஒன்றிய செயலாளர் எதிர்ப்பால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் போனது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் போலீஸ் பாதுகாப்புடன் வருவாய்த் துறையினர் ஆக்கிரமிப்பு கடையை இடித்து அகற்றினர்.

# பொய்யாப்பட்டி அருகே 25 ஏக்கரில் சோலார் மின் திட்டம்: ஐந்து ஆழ்துளைக் கிணறுகளால் தண்ணீர் பஞ்சம் ஏற்படும் அபாய நிலை விவசாயிகள் வேதனை

தருமபுரி ஜூலை 22



தருமபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ளபொய்யாப்பட்டி கிராமப்பகுதியில் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் தனியார் நிறுவனத்தின் சார்பில் சோலார் மின் உற்பத்தி திட்டம் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக ஏராளமான சோலார் பலகைகள் நிறுவப்பட்டு வரும் நிலையில், அப்பகுதியைச் சுற்றியுள்ள விவசாயிகள் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தில் உள்ளனர். விவசாயிகளின் குற்றச்சாட்டுப்படி, சோலார் திட்ட வளாகத்தில் ஐந்து ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் தொடர்ந்து அதிகளவில் நிலத்தடி நீர் எடுக்கப்படுவதால் சுற்றுவட்டார விவசாயக் கிணறுகள் மற்றும் பாசனக் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து வருகிறதுஎனஅவர்கள்தெரிவிக்கின்றனர். இதனால் ஏற்கனவே போதிய மழையின்றி சிரமப்படும் விவசாயிகளுக்கு மேலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். இந்தப் பகுதியில் தென்னை, சோளம், கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. நிலத்தடிநீர்மட்டம்குறைந்தால்விவசாயப் பணிகள் கடுமையாக பாதிக்கப்படுவதோடு, கால்நடைகளுக்கும் குடிநீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். மேலும் சோலார் திட்டத்திற்காக அமைக்கப்பட்டுள்ளன நிலங்களுக்கு செல்ல முடியாத சூழல் உருவாகியுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். சோலார் மின் உற்பத்தி திட்டத்திற்கு தாங்கள் எதிரானவர்கள் அல்ல என்றும், ஆனால் திட்டம் செயல்படுத்தப்படும் போது விவசாயிகளின் நலன் மற்றும் சுற்றுச்சூழல்பாதுகாப்புஉறுதிசெய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். திட்டத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து மாவட்டநிர்வாகம்நிலத்தடிநீர்வளத்துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர் . மேலும் ஆழ்துளைக்கிணறுகள் சட்ட விதிமுறைகளின் படி அமைக்கப்பட்டுள்ளனவா, அவற்றின் மூலம் எவ்வளவு அளவு நீர் எடுக்கப்படுகிறது என்பது குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து விவசாயிகளின் வாழ்வாதார பாதிக்கப்படாத வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொய்யாம்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மதுரை மாவட்டம் கந்து வட்டி கொடுமையால் மதுரை செல்லூர் பெண் உயிரிழப்பு – உரிய நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

மதுரை, ஜூலை 22



மதுரை செல்லூர் பகுதியைச் சேர்ந்த பிரேமா என்பவர், தனது மகளின் திருமணச் செலவிற்காக கலையரசி என்பவரிடம் ரூ.2 லட்சம் கடன் பெற்றிருந்ததாக கூறப்படுகிறது.

அந்தக் கடனுக்கு மாதந்தோறும் ரூ.20,000 வட்டி செலுத்த வேண்டும் என வற்புறுத்தியதுடன், கொலை மிரட்டலும் விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் கடும் மன உளைச்சலுக்கு ஆளான பிரேமா, கடந்த ஜூலை 13ஆம் தேதி விஷம் அருந்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், (ஜூலை 21) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து அவரது உறவினர்கள் மற்றும் பொதுமக்கள், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திசாலைமறியலில்ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து காவல்துறை விரிவான விசாரணை மேற்கொண்டு, உண்மை நிலையை வெளிக்கொண்டு வந்து, சட்டவிரோத கந்து வட்டி வசூல் மற்றும்மிரட்டலில்தொடர்புடையவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நீட் வினாத்தாள் கசிவு;

# மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து ஈரோட்டில் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்



ஈரோடு, ஜூலை 22

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்திற்குப் பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்றும், டெல்லியில் போராட்டத்தில்ஈடுபட்டமாணவர்கள்மீதுகாவல்துறை நடத்தியதாகக் கூறப்படும் தடியடி சம்பவத்தைக் கண்டித்தும், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லம் அருகே, ஈ.வி.கே. சம்பத்சாலையில்நடைபெற்றஇந்தஆர்ப்பாட்டத்திற்கு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமை வகித்தார். முன்னாள் மாவட்டத் தலைவர்கள் டி. திருச்செல்வம், ஈ.ஆர். ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், நீட் தேர்வு வினாத்தாள் கசிவு தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றும்,மாணவர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

இந்த நிகழ்ச்சியில் மண்டல தலைவர் கே. புனிதன், மாவட்ட துணைத் தலைவர் கே.எஸ். செல்வம், தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (TCTU) மாநில துணைத் தலைவர் குளம் எம். ராஜேந்திரன், மாவட்ட பொதுச்செயலாளர்கள் டி. கண்ணப்பன், இரா. கனகராஜன், வி.கே. சச்சிதானந்தம், சூளை கதிர்வேல், டெக்ஸ் அன்பழகன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை. சுப்பிரமணியம், மாவட்ட காங்கிரஸ் ஊடகப் பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், சிறுபான்மைத்துறை துணைத் தலைவர் கே.என். பாஷா, நெசவாளர் அணி தலைவர் சி. மாரிமுத்து, எஸ்.சி. பிரிவு மாவட்ட தலைவர் பிரபு, வழக்கறிஞர் ஜெய்ஹிந்த் எஸ். யுவராஜ், ஈ.எம். சிராஜுதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில், மாணவர்களின் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்றும், நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



## கள்ளழகர் கோவிலில்

# ஆடிப்பெருந்திருவிழா கொடியேற்றம் ஜூலை 29ல் திருத்தேரோட்டம்

மதுரை, ஜூலை22

திருமாலிருஞ்சோலை மற்றும் தென்திருப்பதி என்று போற்றிப்புகழப்படும்அழகர்கோவிலில்அமைந்துள்ள கள்ளழகர் கோவிலில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆடிப்பெருந்திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது. காலை 8:15 மணிக்கு மேல் 8:45 மணிக்குள் மங்கல இசையுடன், தங்கக் கொடிமரத்தில் கருடன் உருவம் பொறிக்கப்பட்ட கொடி ஏற்றப்பட்டு, தோரண மாலைகள் அணிவிக்கப்பட்டுச் சிறப்பு பூஜைகளுடன் தீபாராதனைகள் காண்பிக்கப்பட்டன. திருவிழாவின் முக்கிய வாகனச் சேவைகளாக, இன்று இரவு அன்ன வாகனத்திலும், நாளை (ஜூலை 22) காலையில் தங்கப் பல்லக்கிலும் இரவு சிம்ம வாகனத்திலும் கள்ளழகர் பெருமாள் எழுந்தருளிப் புறப்பாடு நடைபெறுகிறது. ஜூலை 23 அன்று இரவு அனுமார் வாகனத்திலும், ஜூலை 24 அன்று இரவு கருட வாகனத்திலும் பெருமாள் எழுந்தருளுகிறார். ஜூலை 25 அன்று காலை 7:30 மணிக்கு மேல் 8:10 மணிக்குள் சுந்தர்ராஜ பெருமாள் சிவகங்கை சமஸ்தானம் மறவர் மண்டபத்திற்குத் தங்கப் பல்லக்கில் எழுந்தருளுகிறார்; அன்று இரவு சேஷ வாகனத்தில் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது.

29ந்தேதி தேரோட்டம்: தொடர்ந்து ஜூலை 26 அன்று இரவு மோகினி அவதாரத்திலும், அதனைத் தொடர்ந்து யானை வாகனத்திலும் பெருமாள் காட்சி தருகிறார். ஜூலை 27 அன்று இரவு புஷ்ப சப்பரத்திலும், ஜூலை 28 அன்று இரவு குதிரை வாகனத்திலும் புறப்பாடு நடைபெறுகிறது.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் ஜூலை 29ஆம் தேதி புதன்கிழமை நடைபெறுகிறது. அன்று காலை 7:05 மணிக்கு மேல் 7:25 மணிக்குள் திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்வும், அன்றைய தினம் இரவு புஷ்பப் பல்லக்கு சேவையும் நடைபெறும்.

மேலும், அழகர்கோவில் பதினெட்டாம்படி கருப்பணசாமி கோவிலில் வழக்கமாக நடைபெறும் ஆடிப் பௌர்ணமி படி பூஜை, இந்த ஆண்டும் ஆடித் தேரோட்டத்தன்று மாலையில் நடைபெறுகிறது. அன்று திருக்கதவுகள் திறக்கப்பட்டு, 18 படிகளுக்கும் படி பூஜைகள் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டுச் சந்தனம் சாத்துதல் நிகழ்ச்சி நடைபெறும். ஜூலை 30 அன்று தீர்த்தவாரியும், ஜூலை 31 அன்று உற்சவ சாந்தியும் நடைபெறும். இத்திருவிழாவின் நிறைவாக ஆகஸ்ட் 12ஆம் தேதி புதன்கிழமை ஆடி அமாவாசையன்று கருட வாகனப் புறப்பாடு நடைபெற்று விழா நிறைவடைகிறது. விழாவிற்கான ஏற்பாடுகளைக் கோவில் இணை ஆணையர் ஹரிஹரன் மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

# நாகர்கோவிலில் மதுக்கடை பாரில் கொள்ளை சி சி டிவி கேமராவில் கொள்ளையன் உருவம் சிக்கியது

நாகர்கோவில், ஜூலை. 22

நாகர்கோவில், கோட்டாறு ரயில்வே சாலையில் டாஸ்மாக் மதுபான கடை மற்றும் அதனை ஒட்டி பார் இயங்கி வருகிறது. வழக்கம்போல் நேற்று முன்தினம் இரவு ஊழியர்கள் மதுக் கடையை பூட்டி விட்டு சென்றனர். நேற்று காலை வழக்கம் போல் கடையை திறக்க வந்த போது மதுக்கடை யின் பூட்டுகள் உடைக்கப்பட்டு கிடந்தது. இதனை கண்ட ஊழியர்கள் இது குறித்து உடனடியாக கோட்டாறு போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர். அதில் மதுக்கடை பாரில் பணம் மற்றும் பொருட்கள் எதுவும் திருட்டு போகவில்லை என்பது தெரிய வந்தது. போலீசார் வழக்கு வழக்கு பதிவு செய்து தடயவியல் நிபுணர்களை வரவழைக்கப்பட்டு பதிவுகள், கைரேகைகளை சேகரித்தனர்.

பின்னர் அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி இருந்த காட்சிகளை கைப்பற்றி போலீசரார் சோதனை செய்தபோது அதில் நேற்று அதிகாலை நேரத்தில் வாலிபர் ஒருவர் மதுக்கடை பாரின் காம்பவுண்ட் சுவர் ஏறி குதித்த காட்சிகள் பதிவாகி இருந்தது. அந்தகாட்சிகள்அடிப்படையில் போலீசார்விசாரணைநடத்திவருகின்றனர்.



# செவ்வாடை பக்தர்களின் மாவிளக்கு பூஜை

நாகர்கோவில், ஜூலை.22

தமிழ் மாதங்களில் ஆடி மாதம் அம்மன் வழிபாட்டுக்கு உகந்த மாதம் ஆகும். இந்த மாதத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமை கள் விசேஷத்த நாட்களாகும். அதன்படி நேற்று 21ஆம் தேதி ஆடி முதல் செவ் வாய்க்கிழமை ஆகும்.

குமரி மாவட்டத்தில் ஆடிச் செவ்வாய் கிழமைகள் விசேஷமாக கருதப்படுகிறது. அதன்படி நேற்று மாவட்டத்திலுள்ள அம் மன் கோயில்களில் காலையிலே பெண்கள் வழிபாடு நடத்தினர். கன்னியாகுமரி பக வதி அம்மன் கோவில், மண்டைக்காடு பக வதி அம்மன் கோவில், நாகர்கோவில் நடு காட்டு

இசக்கியம்மன் கோவில், சுசீந்திரம் முன் னுதித்த நங்கை அம்மன் கோவில், முப்பந் தல் இசக்கியம்மன் கோவில், ஆலங்குடி இசக்கியம்மன் கோவில், வடிவீஸ்ரம் அழ கம்மன் கோவில், வடசேரி காமாட்சி அம் மன் கோவில் உள்ளிட்ட பல்வேறு கோவில்களில் சிறப்பாக பூஜைகள் நடை பெற்றன. பெண்கள் நெய்விளக்கு, மாவி ளக்கு ஏற்றி வழிபாடு செய்தனர்.

கிருஷ்ணன் கோயில் உள்ள ஆதிபராசக்தி கோயிலில் காலையில் நடந்த மாவிளக்கு பூஜையில் செவ்வாடை பக்தர்கள் திரளாக பங்கேற்று வழிபாடு செய்தனர். குமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தாழக்குடி யில் உள்ள அவ்வையார் அம்மன் கோயி லில் ஆடி செவ்வாய்க்கிழமைகளில் சிறப்பு வழிபாட்டில் ஏராளமான பெண் கள் கலந்து கொண்டனர். அதன்படி நேற்று காலை

முதலே அவ்வையாரம்மன் கோவிலுக்கு அதிக பக்தர்கள் வந்தனர். குமரி மாவட்டம் மட்டுமின்றி கேரளாவில் இருந்து பக்தர் கள் திரளாக வந்த கலந்து கொண்டனர். புதுமண தம்பதிகள், திருமணமாகாத கன் னிப்பெண்கள் வந்து வழிபட்டால் அவர் களின் வேண்டுதல்கள் உடனடியாக நடை பெறும் என்பது நம்பிக்கையாகும். அதன்படி ஏராளமான பெண்கள் இந்த பூஜைகளில் கலந்து கொண்டனர்.



# மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு போர்வை: கலெக்டர் ரேவதி வழங்கினார்

தஞ்சாவூர் ஜூலை 22

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவ லக கூட்ட அரங்கில் பொதுமக்கள் குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் ரேவதி தலை மையில் நடந்தது

கூட்டத்தில் இலவச வீட்டு மனைபட்டா, முதியோர் உதவித் தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம் உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகள் அடங்கிய 688 மனுக் களை பொது மக்கள் கலெக்டரிடம் வழங் கினர் இந்த மனுக்களை பெற்றுக் கொண் ட சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கொடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள் ளுமாறு உத்தரவு பிறப்பித்தார்

அதைத்தொடர்ந்து மாற்றுத்திற னாளிகள் நலத்துறை சார்பில் தேசிய அறக்கட்டளை சட்டம் 1999 ன் கீழ் 5 மாற்றுதிறனாளிக ளுக்கு பாதுகாவலர் நியமன சான்றிதழ் வழங்கினார் .மேலும் அவர் அய்யம் பேட் டையில் உள்ள கிரசன்ட் மன வளர்ச்சி குன் றிய சிறப்பு பள்ளி, மனவளர்ச்சி குன்றியோ ருக்கான பயிற்சி இல்லம் மற்றும் மனநல பாதிக்கப்பட்டோருக்கான இல்லத் தில் தங்கி உள்ள 50 மாற்று திறனா ளிகளுக்கு போர்வைகளை வழங்கினர் கூட்டத்தில் மாவட்டவருவாய்அலுவலர்தியாகராஜன், சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை கலெக் டர் சௌமியா ,உதவி ஆணையர்(கலால்) ரேணுகாதேவி மாவட்ட வழங்கள் அலுவ லர் சந்திரகுமார், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, பேருந்து நிலையத்தில், திடக்கழிவு மேலாண்மை மறுசுழற்சியினை மேம்படுத்தும் பொருட்டு.ர்ர்ர். ரோட்ஸ். ரெயூஸ். ரெசைக்கிள் ] மையத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஓசூர் மாநகராட்சி மேயர் .எஸ்.ஏ.சத்யா மற்றும் ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் .முகம்மது ஷபீர் ஆலம் திறந்து வைத்தனர்.உடன்,ஓசூர்மாநகராட்சிதுணைமேயர்.ஆனந்தைய்யா,மாநகரநலஅலுவலர் மரு.அஜிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.